# தி.மு.க.வின் தேவை தமிழ்நாட்டிற்கு எப்போதும் தேவை!

இந்தியாவுல முன்னேறிய அல்லது உயர்ந்த சமூகம்ன்னு ஒன்னு இருக்கு. நூத்துக்கு ஏழெட்டு பேரு தான் அதுக்குள்ளாற வருவாங்க.

பாக்கி தொண்ணூத்தி சொச்ச பேரும் தான் இந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபைச் சார்ந்த, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் எல்லாம்.

இந்த தொண்ணூத்தி சொச்ச பேர் உள்ள ஒட்டு மொத்த சமூகத்திற்கும் அநீதி இழைச்சது யாருன்னா... முன்னாடி சொன்ன அந்த ஏழெட்டு பேர் உள்ள முன்னேறிய சமூகம் தான்.

அது எப்டீன்னா? எந்த படிப்பா இருந்தாலும் சரி, எந்த அரசு வேலையா இருந்தாலும், பெரிய பெரிய வேலையா இருந்தாலும் சரி இந்த முன்னேறிய சமூகத்தைச் சார்ந்தவங்கதான் படிப்பாங்க, வேலை செய்வாங்க.

மத்தவங்க எல்லாம் இவிங்களுக்கு அடிமைச் சேகவம் செய்யற மாதிரியான வேலைகள் செய்வாங்க. முடி வெட்டுறது, செருப்பு தைக்கிறது, மலம் அள்ளுறது, சாக்கடை நோண்டுறது, வாய்க்கால் வெட்டுறது, வீடு கட்டுறது, மரவேலை செய்யறது, ரோட்டு வேலை, குளத்து வேலை செய்யுறது, உலோக வேலை செய்யுறது, விவசாயம் செய்யுறது, நெசவு செய்யுறது, சாமி தூக்குறது, கொட்டா கட்டுறது...

இப்படி எல்லா வேலையையும் மத்தவங்க செய்வாங்க, ஆனா படிக்கிறது, படிச்சிட்டு இஞ்சினியர், டாக்டர், வழக்கறிஞர், ஆடிட்டர், குமாஸ்தா, டைப்பிஸ்ட்... இப்படியான வேலைகளை இந்த முன்னேறிய சமூகம் மட்டும் செய்வாங்க. அரசு வேலைகள் முழுக்க முழுக்க இவிங்க கிட்டத்தான் இருக்கும்.

இதைத்தான் சமூக அநீதி... அதாவது தொண்ணூத்தி சொச்சம் பேருக்கு வெறும் ஏழெட்டு பேரால நடத்தப்படக்கூடிய அநீதின்னு சொல்லி, அதுக்காக போராடிய இயக்கம் தான் திராவிட இயக்கம். பெரியார், அண்ணா, கலைஞர் எல்லாம் அதுக்காகத் தான் போராடினாங்க. போராடினா மட்டும் போதாது, ஆட்சி அதிகாரம் நம்ம கையில வந்தா தான், இந்த தொண்ணூத்தி சொச்சம் பேருக்கும், இந்த ஏழெட்டு பேரு மட்டும் அனுபவிக்கிற கல்வி, உயர்கல்வி, அரசு வேலைகள், தனியார் நிறுவன உயர் வேலைகள் எல்லாம் கிடைக்கும்ன்னு போராடினாங்க, ஆட்சியைப் புடிச்சாங்க, அதைச் சாதித்தும் காட்டினார்கள்.



**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்

இப்போ எல்லோருக்கும் எல்லாமும் என்கிற நிலை உருவாக்கப்பட்டிருக்கு. இந்த நிலை தான் முன்னேறிய அந்த ஏழெட்டு பேரில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களுக்கும் கல்வி வேலை வாய்ப்புக்களில் இடஒதுக்கீட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்தியது. அதுக்குப் பேரு தான் EWS அந்த முன்னேறிய வகுப்பினரில் ஏழை பாழைன்னா ஏதோ மாசம் இருபதாயிரம் தான் சம்பாதிப்பாங்க, சொந்தமா வீடு கூட கிடையாது. அப்படியே வீடு இருந்தாலும் அது வெறும் ஐநூறு சதுர அடில குடிசை வீடோ அல்லது ஓட்டு வீடாகவோத்தான் இருக்கும், அப்டீன்னு நீங்க நினைச்சு உச்சுக் கொட்டி, அவிங்களும் பாவம் தானே? அவங்களுக்கும் நம்ம இப்ப வெறும் அம்பது வருஷமா அனுபவிச்சிட்டிருக்குற இட ஒதுக்கீட்டுல ஒரு பத்து பர்செண்ட தூக்கிக் கொடுத்து, அவங்களையும் வாழ்க்கைல தூக்கி விடுறதுல என்ன தப்புன்னு நினைச்சீங்கன்னா....

ஸாரி... நீங்க ஒரு லூஸுன்னு அர்த்தம்..!?

சார்... நீங்க இப்ப ஒரு அம்பது வருஷமா அனுபவிக்கிற இட ஒதுக்கீட்டை அஞ்சாயிரம் வருஷமா அவிங்க அனுபவிச்சிட்டு வந்தாங்க. அவிங்கள்ல இப்ப ஏழை பாழைன்னா யாருன்னு ஒன்றிய அரசு சொல்லுதுன்னா...

முன்னேறிய வகுப்பினரில் யார் யாரெல்லாம் மாசத்துக்கு வெறும், நல்ல புரிஞ்சுக்கோங்க மக்களே, வருஷத்துக்கு இல்ல... மாசத்துக்கு வெறும் அறுபத்தஞ்சாயிரம் அதாவது 65 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறாங்களோ, யாருக்கெல்லாம் ஐந்து ஏக்கருக்கு கீழ் நிலம் இருக்கோ (அதாவது ஐந்து ஏக்கர் வச்சிருந்தாலே அவிங்க எல்லாம் ஏழை தானாம்), யார் யாருக்கெல்லாம் ஒரே ஒரு கிரவுண்டுல காங்க்ரீட் வீடு இருக்கோ...


இவிங்கள்லாம் தான் ஏழை... அவிங்களுக்கு எல்லாம் இட ஒதுக்கீடு 10 பர்செண்ட் தரனும்ன்னு ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்துச்சி. ஆனா அதை எதிர்த்து அன்றைய திமுக அரசு வழக்குத் தொடுத்து, தமிழ்நாட்டில் அதை அமல்படுத்த மாட்டோம்ன்னு சொல்லிட்டாங்க. ஏன்னா அவிங்களுக்கு பத்து பர்செண்ட் போச்சுன்னா, அது நம்ம பாவப்பட்ட தொண்ணூத்தி சொச்சம் பேருக்கும் இப்போ கிடைச்சிட்டிருக்குற பர்செண்ட்லேர்ந்து தான் எடுத்து கொடுதாகனும்ங்கறதால தான் ஒரிஜினல் திராவிட இயக்கமான தி.மு.க. அதை இங்கே, நம் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தவில்லை..!

இது வரலாறு... ஆனா பாருங்க, நம்ம திருமா என்ன சொல்றாருன்னா? அந்த முன்னேறிய வகுப்பினருக்கு இடஒதுக்கீடு கொடுக்குறதும் ஒரு சமூகநீதி தானேன்னு ஒரு அறிவார்ந்த கேள்வியக் கேட்கிறார்..!

சகவாச தோஷம் அப்படி..! பா.ஜ.க.வுல 'பா' ந்னு சொல்லவே பயப்படுற கட்சியோட கூட்டணி வச்சிக்கிட்டு, இரண்டு பார்ப்பனர்களுக்கு அமைச்சர் பதவி, அதிலும் ஒருத்தருக்கு இந்து சமய அறநிலையத்துறை கொடுத்திருக்கும் பாஜகவின் குளோனிங் அரசில் பங்கேற்றிருக்கும் திருமா, இப்படி சமூக அநீதியை நியாயப் படுத்திப் பேசுவது ஆச்சர்யம் இல்லை தான்.

திருமா போன்றவர்கள் சோஃபாவுக்காகவோ அமைச்சர் பதவிகளுக்காகவோ கொள்கைகளை மாற்றித் திரித்துப் பேசி சுகம் கண்டு கொள்ளலாம். ஆனால் தி.மு.க. எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்த இடத்தில் இருந்தாலும் அதன் கொள்கைகளில் உறுதியாக இருக்கின்ற காரணத்தினாலேயே... அது பலமான எதிப்புக்களைக் கடந்தே.. போராடிப் போராடியே, தமிழ்நாட்டை இந்தியாவின் ஒரு மாறுபட்ட முன்னேறிய மாநிலமாக உருவாக்கி வருகிறது.

தி.மு.க.வின் தேவை தமிழ்நாட்டிற்கு எப்பொழுதும் தேவை..!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் அவர்களின் நேர்முக உதவியாளர் மணி அவர்களது இல்லவிழாவில் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்றார். நிகழ்வில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாநகர இலக்கிய அணி ஜீவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பல்லக்கில் ஏறிவிட்ட பம்மாத்துப் பேர்வழி!

'ஏமலி ஒன்றைக் குளிப்பாட்டி
நடுவீட்டில் வைத்தாலும்.. அது
வாலைச் சுருட்டிக் கொண்டு
வாசலுக்குத்தான் போகும்' என்பது
அற்றைத் தமிழர்
அனுபவத்தில் பிறந்த
அமுதமொழி.
அது இன்றும் கூட
சரியாகத்தான் இருக்கிறது!

தகுதி என்பதன் ஒரு சிறு
பகுதி கூட இல்லாத
பகட்டு மனிதர் ஒருவருக்குப்
பதவி கிடைத்து விட்டது!

பட்டத்து யானையும்
பல்லக்கும் பரிவாரமும்
பட்டுக் குஞ்சமும் கிடைத்துவிட்டது
ஒரு
பம்மாத்துப் பேர்வழிக்கு!

அரிதாரம் பூசி
கொடுத்ததைப் பேசி
அட்டைக் கத்தியை
ஆணவமாய் வீசி..
அசிங்கம் ஆபாசம் ஆவேசம்
அதிகபட்ச வன்முறை என்று
ஆடிப் பாடி
ஆலிங்கனம் செய்த ஓர்
அற்ப ஜந்துவுக்கு..
அரசபீடம் கிடைத்துவிட்டது!

நிஜத்தின் சொரூபத்தை
நெல்முனை அளவுகூட
நிழற்படத்தில் காட்டாமல்..

நேர்மை என்பதை
நீர் முள்ளின் நுனியளவும்
நெஞ்சத்தில் சேர்க்காமல்..

படம்பார்க்கும் தலைமுறையைப்
பண்பாட்டுத் தளத்தில்
ஓர் அங்குலம் கூட
உயர்த்த நினைக்காமல்..

கள்ளத் தனத்தோடும்
கறுப்புப் பணத்தோடும்
குள்ள மனத்தோடும்
கூட்டாஞ் சோறாக்கும்
ஒரு
கோயபல்ஸுக்குக்
கிடைத்துவிட்டது
கோட்டை!

கருத்தியல் பற்றிக்
கடுகளவும் தெரியாது!
அரசியல் அரிச்சுவடி
அணுவளவும் புரியாது!

மொழிப்போர் பற்றி
முனகிடவும் முடியாது!
வரலாறு பற்றிய
வாசனையே கிடையாது!
'கொள்கைத் தலைவர்களின்
கொற்றத்தைப் பற்றிச்
சற்றே உரை'யென்றால்..
சகல உறுப்புகளும்
சமாதி ஆகிவிடும்
அவருக்கு!

எழுதியதைப் படிப்பார்!
எமனைப்போல் கொதிப்பார்!
வெறித்தனமாய்க் குதிப்பார்!
வீரன்போல் நடிப்பார்!
ஆறு மணிக்குமேல்
அந்தரத்தில் பறப்பார்!

கையில் கொடிபிடித்துக்
களமாடவில்லை!
கனல்தெறிக்கும் வெயிலில்
கால்வைக்கவில்லை!

போராட்டம் என்று
புழுதிக்கு வரவில்லை!
பொதுமக்கள் குறைதீர்க்கப்
பொருளள்ளித் தரவில்லை!

உரிமைப் போரில்
ஒருதுளி பங்கில்லை!
ஒருநாளும் பொதுவெளியில்
நடமாடவே இல்லை!

ஆனாலும்.. வேட்டைக்கு
அதிகாரம் கிடைத்தாற்போல்
கோட்டை கிடைத்துவிட்டது
அந்தக்
கோமாளிப் பிறவிக்கு!

பொறிகளைத் திருப்பி
புலன்களைக் கெடுத்து
அறிவினைச் செரித்து
அறியாமை குவித்து
அரியாசனத்தில்
அமர்ந்து விட்டது..
சரியே இல்லாத
ஒரு
தற்குறிக் கூட்டம்!

திரைக்குப் பின்னாலே
திட்டமிட்டு வட்டமிட்டுத்
தீய குடிலர்கள்
தீட்டிய சதித்திட்டம்
அரைகுறைப் பிரசவமாய்
அமைந்துவிட்டது..நம்
அருமைத் தமிழ்நாட்டுக்கு!

நடிப்பு, நயவஞ்சகம்
நக்கல், நையாண்டி
நச்சுப் பார்வை
நாகரிகப் படுகொலை
அனைத்துக்குமான
அருவருக்கத்தக்க வடிவமொன்று
ஆட்சிக் கட்டிலில்
ஏமாளிகளைப் படியாக்கி
ஏறி விட்டது!

அந்தோ..!
அதற்கு
சித்தாந்தம் தெரியுமா?
சிறைவாசம் தெரியுமா?
திராவிடம் தெரியுமா?
தீந்தமிழ் தெரியுமா?
தியாகம்தான் தெரியுமா?

அதற்குத்
தெரிந்ததெல்லாம்
காட்டுத்தனமான கூச்சல்!
கண்ணியமே இல்லாத பாய்ச்சல்!
எல்லைகள் கடந்த மேய்ச்சல்நம்
இயக்கத்தின் மீதான காய்ச்சல்!

இந்தப் போக்கு
ஆரோக்கிய அரசியலின்
ஆயுளைச் சாகடிக்கும்
இரத்தப்போக்கு!

இதனைத்
தடுத்து நிறுத்த வேண்டிய
தார்மிகப் பொறுப்பு
ஒவ்வொரு தமிழனின்
தலைமீதும் இருக்கிறது!

வயப்புலியை
வாலுருவி விட்டு
வேடிக்கை பார்க்கும்
இந்த
வீணர்களை
வீழ்த்தவில்லை என்றால்
வீழ்ந்துவிடும் தமிழகம்!

சரித்திர மனிதர்களை
சகட்டு மேனிக்குப்
புண்படுத்தி மகிழும்
போலிகளின் முகத்திரையைக்
கிழித்தெறிந்தால்தான்
கீழ்வானம் வெளுக்கும்!

இன்பத் தமிழகம்
இதுவரைக்கும் காணாத
துன்பியல் ஆட்சியைத்
துடைப்பத்தால் துடைத்துத்
தூக்கி எறிவோம்!

கண்களை விற்றுக்
கயவர்களைப் பெற்றுக்
கண்ணீர் வடித்துக்
கலங்கும் மக்களைக்
கரங்கொடுத்துக் காப்போம்!

நூறே நாளில்
நொறுங்கிக் கிடக்கும்
மனித மாண்புகளை
மறுபடியும் சேர்ப்போம்!

அரங்கேறி விட்ட
அநியாய தர்பாரை

**கவிஞர் கங்கைகொண்டான்**
**சேலையூர்**

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 118ஆம் ஆண்டு பிறந்த நாள் ஊர்வலம்!

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது

திருவண்ணாமலை, செப்.14-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறுகிறது. ஊர்வலத்திற்கு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலக தமிழர்களின் உள்ளங்களிளெல்லாம் சிம்மாசனம் போட்டு, கொலுவீற்றிருக்கும் செந்தமிழறிஞர் தமிழ்மொழி உணர்வுக்காகவும், தமிழர் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த ஆற்றலாளர். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று தம்பியர் பெரும்படை கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன், மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து, தாய்க்கு பெயர் தந்த தனிபெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்கவைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது.

15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை சரியாக 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகிலிருந்து, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்திற்கு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், சிவ.ஜெயராஜ், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், மாநில அமைப்புசாரா அணி ஏ.ஏ.ஆறுமுகம்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபா கரன், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு. கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீ ன்ஸ்ரீ தரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர் தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், எல்.ஐ.சி. து.வேலு, இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர். அன்பரசு, நா.மாசிலாமணி, கற்பகம் சரவணன், உ.நித்யா,

டாஸ்மாக் ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ. தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பால சுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்

நகர செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜியராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதி நிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

### செப்.15- பேரறிஞர் அண்ணா சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவிப்பு!

# சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் சங்கத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### சங்கப் பொதுச் செயலாளர் த.ஆறுமுகம் வேண்டுகோள்!

சென்னை, செப். 14–

சங்க பொதுச் செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் வேண்டுகோள் வருமாறு:–

தென்னாட்டு காந்தி இந்நாட்டு இங்கர்சால் காஞ்சி கரிபாலிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளான செவ்வாய்க்கிழமை 15.09.2026 அன்று காலை 08.00 மணிக்கு, சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மரியாதைக்குரிய தமிழ்நாடு மக்களின் முதல்வர் அன்புத் தளபதி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றார். அவ்வமயம், கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ் தலைமையில், தொழிலாளர் அணி துணைச் செய லாளர்கள் பிடிசி. வெ.பாலு, மு.இராஜகாந்தம், இராஜா குப்புசாமி, ஆர் வரதன் ஆகியோர் முன்னிலையில், தொ.மு.ச. சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின், தலைமை சங்க நிர்வாகிகள், கிளைச் சங்க நிர்வாகிகள், மற்றும் சங்க முன்னோ டிகள் கருப்பு சிவப்புச் சீருடையில் 15.09.2026 அன்று காலை 7.00 மணிக்கு பெருந்திரளாக திரண்டு அணி வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மாநகர போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த. ஆறுமுகம் கூறியுள்ளார்.